செ.வெ. எண்: 236 நாள்: 26.04.2017

# செய்தி வெளியீடு

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு பா. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் தலைமையில் இன்று 26.04.2017 சென்னை, கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரக ஆய்வரங்கத்தில் அனைத்து மண்டல இணை இயக்குநர்கள் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 2016–17 ஆண்டில் துறையினால் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை விரிவாக ஆய்வு செய்து, முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் முன்னோடித் திட்டங்களான விலையில்லா கறவைப் பசுக்கள் / வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டம், கோழியின அபிவிருத்தித் திட்டம், தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் மூலம் செயல்படுத்தப்படும் கால்நடை காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றின் குறியீடு மற்றும் சாதனைகளை மாவட்ட வாரியாக ஆய்வு செய்தார்கள்.

தமிழ்நாட்டில் வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள கால்நடை தீவனத் தட்டுப்பாட்டினை தொடர்ந்து துறையின் மூலம் செயல்படுத்தப்படும் வறட்சி நிவாரணப் பணிகள் குறித்தும், மேலும் இத்துறையின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள 300 உலர் தீவனக் கிடங்குகளின் செயல்பாடுகளை மாவட்ட வாரியாக ஆய்வு செய்ததுடன், மாநிலம் முழுவதிலும், 15,000 ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்ட தீவனச் சோளப் பயிர் சாகுபடி குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்கள். விவசாயிகள் தங்களது கால்நடைச் செல்வங்களை விற்பனை செய்வதை தடுக்கும் நோக்கில் துறை அலுவலர்கள் செயல்பட வேண்டும் எனவும், அனைத்து மண்டல இணை இயக்குநர்களுக்கும் அறிவுறுத்தினார்கள்.

மேலும், அதிகமாக நாட்டுக்கோழியினை உற்பத்தி செய்வதற்கு முக்கியத்துவம் தரவேண்டும் எனவும், நாட்டுக்கோழி பண்ணைகள் அதிகமாக மாநிலத்தில் செயல்படும் வகையில் துறையின் செயல்பாடுகள் சிறப்பாக அமைய வேண்டும் என்றும், கால்நடை மருந்தகங்கள் இல்லாத கிராமங்களில் நடமாடும் கால்நடை மருந்தகம் மூலம் அக்கிராமங்களுக்கு சென்று கால்நடைகளின் நோய்களை களைய உதவிடும் வகையிலும் மற்றும் குறிப்பிட்ட இடங்களில் அதிகளவில் கிடைக்கும் வைக்கோல் தீவனங்களை அதிகமாக தேவைப்படும் இடங்களுக்கு கொண்டு சென்று கால்நடைகளுக்கு வைக்கோல் தீவனம் முழுமையாக கிடைக்கும் வகையில் உரிய ஏற்பாடுகளை செய்ய மண்டல இணை இயக்குநர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

2017–18 ம் ஆண்டில் செயல்படுத்தப்பட இருக்கும் திட்டங்கள் குறித்தும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்கள். கால்நடை பராமரிப்புத் துறையின் செயல்படுகள் அனைத்து தரப்பு விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும் வகையில் இருக்க வேண்டும் எனவும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

இந்த ஆய்வு கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் (கூ/பொ) முனைவர் இரா. நந்தகோபால், இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர்கள், மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**